www.tamilarangam.net

இலவசம்

# களத்தில்

விசேட பதிப்பு

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 22. 01. 1993

# தளபதி கிட்டு வீரச்சாவு

## தமிழீழ அமைதிக்கு இந்தியா மீண்டும் முட்டுக்கட்டை



தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்திய குழுவின் மூத்த உறுப்பினரான திரு. சதாசிவம் கிருஸ்ணகுமார் (கிட்டு) அவர்களை ஏற்றிக்கொண்டு பயணம் செய்துகொண்டிருந்த எம். வீ. அகாட் (M. V. AHAD) என்ற 280 தொன் சரக்குக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய நேரப்படி 13-1-93 புதன்கிழமை இரவு 10 மணியளவில் இந்தியக் கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டது. தென்னிலங்கையிலுள்ள அம்பாந்தோட்டைக்குக் கிழக்காக 290 மைல் தூரத்திலும் தென்னிந்தியாவுக்குத் தென்கிழக்காக 440 மைல் தூரத்திலும் (நீளக்கோட்டிற்கு 85 பாகையிலும் அகலக்கோட்டிற்கு 6 பாகையிலும்) இந்து சமுத்திரத்தில் கப்பல் நிற்கையிலேயே இடைமறிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதன்பின்பு கப்பல் தமிழ்நாட்டை நோக்கிச் செல்லுமாறு இந்தியக் கடற்படையினரால் வற்புறுத்தப்பட்டது.

தொடர்ச்சி 2ம் பக்கம் ....


### வீர வணக்கம்

தை 16ஆம் திகதி, கேணல் கிட்டுவினதும் ஒன்பது போராளிகளினதும் மரணத்திற்குக் காரணமாக அமைந்த இந்தியக் கடற்படையினதும் இந்திய அரசினதும் செயல்களை, தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டிக்கின்றனர். விடுதலைக்காகப் போராடுகின்ற சமாதானத்தை அவாவுகின்ற ஒரு மக்களுக்கு எதிரான, இந்திய அரசினால் இழைக்கப்பட்ட கொலைபாதகமானதும் சட்ட விரோதமானதுமான இச்செயல்கள் தமிழ் மக்களின் மனங்களில் ஆழமான வடுவையும் கொழுந்துவிட்டு எரியும் கோப உணர்வினையும் ஏற்படுத்தியுள்ளன.

தமிழ் மக்களின் அபிலாசைக்காக - விடுதலைக்கானதும் கௌரவம், அமைதியுடன் வாழ்வதற்குமான மக்களின் போராட்டம் வெற்றிபெற தம் இன்னுயிர் நீத்த அத்தியாகிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செய்கின்றனர். தமிழ் மக்களின் இதயங்களிலும், மனங்களிலும் கொலுவீற்றிருக்கப் போகும் அம்மாவீரர்களின் பெயர்கள் வருமாறு:

- கேணல் கிட்டு
- மேஜர் வேலன்
- கப்டன் றொசான்
- கப்டன் குணசீலன்
- லெப்டினன்ட் தூயவன்
- லெப். கேணல் குட்டிசிறி
- கப்டன் நாயகன்
- கப்டன் ஜீவா
- லெப்டினன்ட் நல்லவன்
- லெப்டினன்ட் அமுதன்

தமிழீழ விடுதலைப்புலிகளின்
சர்வதேச செயலகம்
இலண்டன்
19-01-1993



• லெப். கேணல் குட்டிசிறி

## தலைவர் பிரபா
## அமைதிக்கு அறைகூவல் விடுத்த 3 நாளில் சோதனை !

யாழ் குடாநாட்டுக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட அங்கிலிக்கன் பேராயர் கெனத் பெர்னான்டோவினை தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும் சந்தித்து உரையாற்றினர். இக்கலந்துரையாடலில் தலைவர் பிரபாகரன் சமாதான வழியில் தீர்வு காண்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள்ள அக்கறையை மீளவும் தெளிவாக்கியுள்ளார். இரண்டரை மணிநேரமாக நடந்த இக்கலந்துரையாடலில் பொருளாதாரத் தடைவிதிப்பால் மக்கள் அநுபவிக்கும் துன்பங்களும், போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டுள்ளதால் மக்களுக்கு ஏற்படும் பிரயாணப் பிரச்சினைகளும் ஆயருக்கு விளக்கிக் கூறப்பட்டன. இவ்வாறு தமிழீழத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிகள் மேற்கொள்

தொடர்ச்சி 3ம் பக்கம் ....



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தளபதி கிட்டு...

அதன்பின்பு கப்பல் தமிழ் நாட்டை நோக்கிச் செல்லுமாறு இந்தியக் கடற்படையினரால் வற்புறுத்தப்பட்டது. கப்பல் இடைமறிக்கப்பட்ட செய்தி, முதன் முதலில் பாரிசில் வைத்து விடுதலைப்புலிகளின் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் அவர்களால் 15-1-93 வெள்ளிக்கிழமை காலை வெளியிடப்பட்டது. ஆரம்பத்தில், இந்தியா இடைமறிப்பை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ மறுத்துவிட்டது. பின்னர் உத்தியோகபூர்வமற்றமுறையில் செய்திமுகவரிடம், கப்பல் ஆழ்கடலில் கிட்டு அவர்களுடன் இந்தியப் பீரங்கிப் படகுகளால் சுற்றிவழைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொண்ட இந்திய அரசு வட்டாரங்கள் "நாங்கள் அவரை இனி மேல்தான் கைதுசெய்யவுள்ளோம்" என்றனர். ஆயினும் இக்கட்டத்தில் எவ்வித உத்தியோகபூர்வ அறிக்கைகளும் இந்திய அரசால் வெளியிடப்படவில்லை.

இந்திய அதிகாரபீடத்தினர், இடைமறிப்புப் பற்றிய எல்லாச் செய்திகளையும் 36 மணித்தியாலங்களுக்கு மேலாக இருட்டடிப்பு செய்தபின்னர், அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு இடைமறிப்பை உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ மறுத்த நிலையில் 16-1-93 சனிக்கிழமை மதிய நேரத்தில், கிட்டு அவர்கள் பிரயாணம் செய்த கப்பல் வெடித்து எரிவதாகவும், தப்பியோரில் கிட்டு அவர்கள் காணப்படவில்லை எனவும் கூறினர். கிட்டு அவர்களை பலவந்தமாக சரணடைய வைக்கக்கூடிய முறையில், கப்பல் இந்திய கடற்படையினரால் சுடப்பட்டுள்ளமையும் வெளிவந்துள்ளது. கிட்டு அவர்களின் கொலைக்கு இந்தியாவே குற்றவாளியாகி நிற்கிறது. சர்வதேச கடற்பரப்பில் கப்பலை இடைமறித்த இந்திய கடற்படையின் செயல் கடற்கொள்ளைத்தனத்தின் அடாவடித்தனமாகும். இந்தியா தனது செயல்களால் கிட்டு அவர்களின் மரணத்திற்கு பொறுப்பாளியாவதுடன், சர்வதேச சட்டத்தை கூட்டுமொத்தமாக மீறியுமுள்ளது.

கப்பல் வெடிபொருட்களை எடுத்துச் சென்று கொண்டிருந்ததாகவும், கப்பலில் பயணம் செய்தவர்கள் அதை வெடிக்க வைத்ததாகவும் கூறுவதன்மூலம் இந்தியா தனது கடற்கொள்ளைத்தனமான செயலை திசை திருப்ப முயல்வதாகத் தெரிகிறது. நீரில் மூழ்கிக்கொண்டிருந்த கப்பலில் இருந்து தப்பியவர்களின் வாக்குமூலம் என்ற பெயரில் தனக்கு ஆதரவு தேட முயல்கிறது.
ஆயினும் இந்தியப் பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் தமது பாதுகாப்பில் உள்ளவர்களிடமிருந்து சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலங்களை பெறுபவர்கள் என்ற அவப்பெயர் உலகில் இருந்து வருகிறது. கிட்டு அவர்களின் தியாகம் தொடர்பான உண்மைகள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்திய அதிகாரிகள் 36 மணித்தியாலங்களுக்கு மேலாக கப்பல் இடைமறிக்கப்பட்டமை சம்பந்தமான செய்திகளை ஏன் இருட்டடிப்புச் செய்தனர்?
அடுத்து. அக்கப்பல் இடைமறிக்கப்பட்டதை மறுக்கவோ ஏற்கவோ தொடர்ந்தும் முன்வராமல் மேலும் 24 மணி நேரம் இந்திய அரசு மௌனம் சாதித்தது ஏன்? கிட்டு அவர்கள் அமைதிப் பணி தொடர்பாக தமிழீழம் நோக்கி ஆழ்கடலில் பயணம் செய்துகொண்டிருந்த கப்பலை, இந்தியக் கடற்படை இடைமறித்ததை தற்செயலான நிகழ்வாக இந்தியா காட்ட முயல்கிறதா? அப்படியானால் இந்தியக் கடல் எல்லைக்குள் கப்பல் எப்படிச் சென்றடைந்தது?
கிட்டு அவர்களை கொண்டு சென்ற கப்பல் தானகவே இந்திய கடற்பிராந்தியத்துள் நுழைந்தது என்பதை உலகு நம்ப வேண்டுமென இந்தியா எதிர்பார்க்கிறதா? கப்பல் பலவந்தமாக இந்திய கடல் எல்லைக்குள் வழிப்படுத்தப்பட்டது என்பதை இந்தியாவால் மறுக்கமுடியுமா? இந்தியா தனது கடற்படையினர் கப்பலுக்குள் ஏறி கிட்டு அவர்களையும் மற்றவர்களையும் கைது செய்ய முயற்சிக்கவில்லை என கூறுமா?
கிட்டு அவர்களுக்கு எதிராக இந்தியா இழைத்துள்ள அநீதி, தமிழீழ மக்களுக்கும் அவர்களது நீதிக்கான, விடுதலைக்கான போராட்டத்திற்கு மட்டும் எதிரானது அல்ல. கடற்கொள்ளைத்தனமான இச்செயல் முழுமனிதாயத்திற்கும் எதிரானது. சர்வதேச சமூகத்தவரும், உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களும், இத்தகைய குற்றச் செயல்கள் தண்டனை பெறாமல் விடப்படுவதை ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள். சர்வதேசச் சட்டங்கள் எங்கு மீறப்பட்டாலும் உலகெங்கும் உறுதியின்மையை ஏற்படுத்துவதற்கு அது முன்னுதாரணமாக அமைந்துவிடும். ■

# காலம் ஆற்றுமா இக்காயத்தை?

## கிட்டண்ணா : சில குறிப்புகள்

**15-1-93** அன்று வெள்ளிக்கிழமை மாலை அச்செய்தி கிடைத்தது. கிடைத்த அச்செய்தி என்னை அப்படியே நிலை குலைத்து உட்காரச் செய்தது. ஆம்! தளபதி கிட்டண்ணா பயணம் செய்த கப்பலை சர்வதேச கடல் எல்லைக்குள் வைத்து இந்திய கடற்படை இடைமறித்துக் கொண்டது என்பதே அச்செய்தி.

கிட்டண்ணாவுக்கு என்ன நடந்தது? தன்னைத் தானே அழித்துக் கொண்டிருப்பாரா? அப்படியேதும் நடைபெற்றுவிடக் கூடாது என்று மனம் பிரார்த்திக்கத் தொடங்கியது. கிட்டண்ணாவினை அறிந்தவன் என்ற வகையில், விடுதலைப் புலிகளின் வீர மரபினைத் தெரிந்தவன் என்ற வகையில் நிச்சயமாக கிட்டண்ணா உயிருடன் பிடிபட மாட்டார் என்பதனை மிக இலகுவாகப் புரிந்து கொண்டிருந்தும் மனம் அதனை ஏற்க மறுத்தது.

"எனக்கு உள்மனம் சொல்லுது கிட்டண்ணாவுக்கு ஒண்டும் நடந்திராது" நண்பர்களிடம் கூறிக்கொண்டேன். என்ன நடந்திருக்கும்? கிட்டண்ணாவும் ஏனைய போராளிகளும் எவ்வாறு இந்தியக் கடற்படையினை எதிர் கொண்டிருப்பார்கள்? இவை போன்ற விடயங்கள் தொடர்பான அறிவியல் ரீதியான சிந்தனைக்கு எனக்கு நானே தடை போட்டுக் கொண்டேன்.

'கிட்டண்ணா திரும்பி வருவார். எத்தனை தடவைகள் யமனை வென்றவர் அவர்.' எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன். ஆறுதல் தரும் செய்திகள் வராதா என ஏக்கத்துடன் காத்திருந்தேன். வெவ்வேறு தகவல்கள் வந்து போயின. சில கணம் நம்பிக்கையும் பல கணங்கள் நம்பிக்கை அற்றதுமான செய்திகள் வந்து கொண்டேயிருந்தன.

இறுதியில்......
அந்தச் செய்தி கிடைத்தது. இந்திய அரசின் சதிச் செயலுக்கு தளபதி கிட்டண்ணாவும், மேலும் ஒன்பது போராளிகளும் பலியாகிவிட்டார்கள் என்ற அந்தச் செய்தி கிடைத்தது. தலைமைப் பீடத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் கூட, இன்னும் மனம் ஏற்க மறுக்கும் அந்தச் செய்தி கிடைத்தது.

யார் இந்தக் கிட்டண்ணா? தமிழீழ மண்ணின் புல், பூண்டுகள் கூடக் கூறும் அவர் பெயரை. வயதுக் கணக்கில் பார்த்தால் 33 வயது இளைஞன்.

ஆனால் அவர் சாதித்தது ஏராளம். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கிட்டண்ணாவுக்குத் தனியான ஒரு இடம் உண்டு.

ஒரு போராளியாய், தளபதியாய், தமிழீழ அரச உருவாக்கத்தின் அத்திவாரமாய், ஒரு சிறந்த போர்த்தந்திரியாய், சிறந்த இராசதந்திரியாய், எழுத்தாளனாய், சித்திரக்கலைஞனாய், சிறந்த விமர்சகனாய்..... கிட்டண்ணாவின் பரிமாணங்கள் விசாலமானவை.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக யாழ் குடாநாட்டு பிரதேசத்தினை எதிரியின் பிடியிலிருந்து விடுவித்து தமிழீழ மக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமாக்கியவர் கிட்டண்ணா. இதனை இவர் சாதிப்பதற்கு இவரால் பயன்படுத்தப்பட்ட போர்த்தந்திரோபாயங்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. குறைந்த ஆள், ஆயுத பலத்துடன் எதிரியினை முகாம்களுக்குள் முடக்கி பிரதேசத்தை விடுவித்து தமிழீழம் நடைமுறைச் சாத்தியமான விடயமே என்பதனை முதன் முதலில் உணர்த்தியவர் இவரே.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களின் பிரச் சனைகளைத் தீர்ப்பதற்காக கிட்டண்ணாவும், திலீபனும் இணைந்து, போராளிகளின் ஊடாக மக்களை இணைத்து மேற்கொண்ட சிவில் நிர்வாக முறைமையே இன்று தமிழீழ உருவாக்கலுக்கு அடிப்படையாக அமைந்தது.

தமிழீழ மக்களின் பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான நிதியினைப் பெற்று கொள்ளவும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டத்தில் கிட்டண்ணா முன் நின்றவர். இதன் வெளிப்பாடாய் பல உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் உருவாகலாயின. போராளிகள், முகாம்களில் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட பொருளாதார வளமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை பலப்படுத்த உதவியது.

துரோகிகளின் குண்டு வீச்சில் தனது ஒரு காலை இழக்கும் வரை யாழ் மாவட்டத் தளபதியாய் இருந்து, அவர் ஆற்றிய பணிகளை எழுதுவது என்பது இலகுவானதல்ல. அது எனது நோக்கமுமல்ல. கிட்டண்ணாவின் போராட்டப் பங்களிப்பில் இக் காலப்பகுதி ஒரு பரிமாணமாகும்.

* * *

இலங்கை - இந்திய ஒப்பந்தமும், இந்தியப் படையின் வரவும், பின் இலங்கை -இந்திய ஒப்பந்த நிறைவேற்றல் தொடர்பாக ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பாக வெடித்த இந்திய -தமிழீழ யுத்தத்தில், இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமரசம் காணும் முயற்சியில் கிட்டண்ணா முன்னின்று உழைத்தார். இதில் பல கசப்பான பாடங்களையும் இந்திய தரப்பிலிருந்து கற்றுக் கொண்டார். பின்னர் இது தொடர்பாக அவரிடம் உரையாடியபோது, அவர் என்னிடம் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இந்திய அரசுடன் சமாதானம் பேச முடியும் என்ற நம்பிக்கை தலைவருக்கு இருக்கவில்லை. இருந்தும் எனது சமாதான முயற்சிக்கு தலைவர் தடையாக இருக்கவில்லை. இறுதியில் தலைவரின் கூற்றுக்களே உண்மை என்பதனையே எனது சமாதான முயற்சி உணர்த்தியது."

* * *

சர்வதேச செயற்பாடுகளில் கிட்டண்ணாவின் பணி மிகவும் காத்திரமானது. முன்னர் கிட்டண்ணாவைத் தெரிந்திருந்தவர்களுக்கு அவரது வளர்ச்சியும், அறிவு முதிர்ச்சியும் இங்கு மிக மிகத் தெளிவாகவே தெரிந்தது.

அனுபவமும், போராட்டக் கல்வியும் எவ்வாறு தலைமைத்துவப் பண்புகளை அதிகரித்துக் கொண்டு வருகின்றன என்பதனை ஆரம்பத்திலிருந்தே கிட்டண்ணாவைத் தெரிந்தவர்கள் நன்கு புரிந்திருப்பர்.

நான் இங்கு வந்தபின்புதான் எனது நாட்டின் அருமையினை முழுமையாக உணர முடிகின்றது என்பதனை அடிக்கடி இங்கு கூறிக் கொண்டவர் கிட்டண்ணா.

"வெளி நாடுகளில் இயக்கத்திற்கு வேலை செய்வதற்கு மிகுந்த மனப்பக்குவம் தேவை" இது ஒருதடவை, வெளிநாட்டில் செயற்படுவதற்கு பலர் பின் நிற்பது தொடர்பாக கலந்துரையாடிய போது, அவர் வெளியிட்ட கருத்து.

இங்கு எவற்றை நோக்கினும், அவற்றை தமிழீழத்துக்கு பொருத்தமான வகையில் எவ்வாறு பிரயோகிப்பது என்பது குறித்த சிந்தனை அவருடன் எப்போதும் குடிகொண்டிருக்கும். எப்போதும் தமிழீழ மண்ணின் வளர்ச்சி குறித்தும், விடுதலைப் போராட்டத்தின் வெற்றி குறித்தும் சிந்தனை அவரை ஆட்கொண்டிருக்கும்.

"மக்களைப் போராட்டத்துடன் இணைப்பதற்கு கலைப்படைப்புக்களின் பணி காத்திரமானது. மிகவும் தரமான கலைப் படைப்பை நாம் படைக்க வேண்டும்" என கலைஞர்களை நோக்கிக் கூறி அவர்களை உற்சாகப்படுத்துவார்.

அரசியல் நிலைமை தொடர்பாகவும், சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் பல முயற்சிகளில் ஈடுபட்டு சர்வதேச அரசியலின் நெளிவு சுழிவுகளை நன்கு புரிந்துகொண்ட தலைவர் அவர்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அரசியல் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் நோக்கினை உள்ளடக்கிய பல யோசனைகள் அவரின் நெஞ்சினுள் புதைந்திருந்தன.

சர்வதேச நாடுகளின் அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் போன்றவற்றை உள்வாங்கி ஒரு சமாதான தூதுவராய் தமிழீழம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில்....

* * *

கிட்டண்ணாவைப்பற்றி எழுதுவதானால் எழுதிக்கொண்டே இருக்கலாம். கிட்டண்ணாவிடம் மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது உயிரை அர்ப்பணித்த ஒவ்வொரு போராளியினதும் வரலாறும் மிகுந்த காத்திரமான தன்மையினைக் கொண்டிருக்கும்.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தம்மை அர்ப்பணித்த போராளிகளுள் கிட்டண்ணாவின் பணிக்கு விசேட பல பரிமாணங்கள் உண்டு. உள்ளூர், சர்வதேச, இராணுவ, அரசியல், இராசதந்திர அனுபவங்களைக் கொண்ட தலைவரை நாம் இழந்து விட்டோம் என்பதனை எண்ணும்போது அவர் ஏற்படுத்திய வெற்றிடம் கண்ணுக்குத் தெரிகின்றது. 'இயற்கை வெற்றிடங்களை விடுவதில்லை' என்பார்கள். அந்த நம்பிக்கையினை எமக்குள் ஏற்படுத்திக் கொள்வதினைத் தவிர வேறு வழியில்லை.

கிட்டண்ணா தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றிய பங்கு நிச்சயமாக நூலுருப் பெறவேண்டியது மிக மிக அவசியமானதாகும். கிட்டண்ணாவின் அனுபவங்களும், வரலாறும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல, உலகில் நடைபெறுகின்ற, நடைபெறப்போகின்ற பல விடுதலைப் போராட்டங்களுக்கு வழிகாட்டியாகவும் அமையும்.

* * *

கிட்டண்ணாவின் இழப்பு உறுதிப்படுத்தப்பட்ட 17-1-93 அன்று தனிமையில் இருந்து கிட்டண்ணா தொடர்பான நினைவில் மூழ்கினேன்.

'நிகழ்வும் நினைவும்' பகுதி தொடர்பாக எனக்கு மிகுந்த உற்சாகத்தினை அழித்து வந்தவர் அவர்தான். அவர் தந்த உற்சாகம் எவ்வளவு அலுவல்கள் இருந்தாலும் இப்பகுதியினை எழுதுவதற்கு என்னைத் தூண்டிவிடும்.

ஆனால்....
இன்று இப்பகுதியிலேயே அவரைப்பற்றி எழுதுவேன் என்று நான் என்றுமே நினைத்ததில்லை. காலம், எல்லாவகைக் காயங்களையும் குணப்படுத்தும் என்பார்கள். ஆனால் இக்காயத்தை....
■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "ஒடுக்குமுறைகள் இனக்கொலை போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதே எனது கொள்கை" — கிட்டு



**( கேணல் கிட்டு அவர்கள் யாழ். தளபதியாக இருந்தபோது 1987ல் FRONT LINE பத்திரிகைக்கு அளித்த பேட்டியை இங்கு மறு பிரசுரம் செய்து அவரின் கருத்துக்களை நினைவு கூறுகிறோம் )**

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்டத்தளபதி, சாமான்ய உயரத்திலும் சிறிது குள்ளமானவர். கண்ணாடி அணிந்துள்ள அவரது தலையின் முன்பக்கத்தில் மயிர்கள் கொட்டியதால் அகன்ற நெற்றியுடையவர். மென்மையும் கவர்ச்சியும் கொண்ட அவரது முகம் எவரையும் கவரக்கூடியது. 26 வயது நிரம்பிய சதாசிவம் கிருஸ்ணகுமார் அல்லது கிட்டு என்று அழைக்கப்படும் இவரே, சிறீலங்கா அரசினால் இன்று வரை தேடப்படும் அதிமுக்கியமான தீவிரவாதத் தலைவர். தமிழீழ நாடு முழுவதையும் (அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்கள்) தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்கும் அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டம் இப்பொழுதே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலே உள்ளது. சிறீலங்கா முழுவதும் யாரைப் பார்த்தாலும் 'கிட்டு'வைப் பற்றியே பேசப்படுகிறது. கிட்டு உரையாடும்போது மிகவும் மென்மையாகவும் மிகவும் மரியாதையுடனும், சிலவேளைகளில் சில கொள்கையை விளக்கிட ஜாடை மாடையுடனும் பேசுவார். அவர் சிரிக்கும் போது அவருடைய கண்ணும் சிரிக்கும். ஆனால் இயக்கக் கட்டுப்பாடு நிலைமையை ஒட்டிப் பேசும்போது அவரது குணமே மாறிவிடும். யாழ்ப்பாணத்தில் வயதான தமிழர்கள், கிட்டுவைக் 'கிட்டர்' (வட இந்தியாவில் 'கிட்டர்ஜி' மாதிரி) என்று மரியாதையோடு அழைப்பார்கள். யாழ்ப்பாணத்து இளம் பிள்ளைகளுக்கெல்லாம் அவர் 'கிட்டுமாமா' தான்.

அவருடன் (FRONT LINE) நிருபர் நடத்திய பேட்டி விபரம் வருமாறு:-

**கே: உங்களுக்கு 'கிட்டு' என்ற பெயர் எப்படிக் கிடைத்தது?**

**கிட்டு:** நான் இயக்கத்தில் சேர்ந்தபோது எனது இயக்கம் வைத்த 'வெங்கிட்டு' என்ற பெயர். மேலும் சுருக்கமாக கிட்டுவாக மாறிவிட்டது.

கிட்டு 1978 ம் ஆண்டு 18 வயதில் பாடசாலை மாணவனாக இருந்தபோதே இயக்கத்தில் சேர்ந்துவிட்'டார்.

"நான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவன். 1950 தொடக்கம் வல்வெட்டித்துறை மக்கள் அரசின் அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனர். கள்ளக்கடத்தலையும், கள்ளக்குடியேற்றத்தையும் தடுப்பதாகக் கூறிக்கொண்டு எமது மக்களை துன்புறுத்திவந்துள்ளது. இந்த ஒடுக்குமுறையை நிறுத்த என்ன செய்யலாம் என்ற எண்ணத்துடனேயே வளர்ந்தேன். இதைத்தொடர்ந்து தமிழீழ மக்கள் அனைவருமே அரச பயங்கரவாதத்தினால் இன்னல்படத் தொடங்கினர். ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் உணர்வோடு வளர்ந்த நான், பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தேன். ஒடுக்குமுறைகள் இனக்கொலை, போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதே எனது கொள்கை. எனவே எல். ரி. ரி. யுடன் என்னை இணைத்துக் கொண்டேன். பிரபாகரனும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். அப்போது எனக்கு போதியளவு அரசியல் ஞானம் இருக்கவில்லை. ஆனால் நான் ஒரு விடுதலைப் போராளியாக என்னை மாற்றிக் கொண்டபின், தெளிவான அரசியல் ஞானமும், எமது தமிழீழ விடுதலையில் முழுநம்பிக்கையும் ஏற்பட்டது. போராட்டத்தில் இறங்கிய பின்னர் அனுபவ ரீதியாக அரசியல் தத்துவங்கள் எனக்குப் புரிந்தன.

**கே: உங்களுக்கெனக் குறிப்பான அரசியல் தத்துவம் அல்லது கொள்கை உண்டா?**

**கிட்டு:** நல்லது, எனக்கென்று அரசியல் கொள்கைகள் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையே எனது கொள்கை. அதையே எனது கொள்கையாகவும் முழுமையாக ஏற்றே இயக்கத்தில் இருக்கிறேன். நான் செயலிலேயே முழுநம்பிக்கை உடையவன். தத்துவங்களை இட்டு பேசுவதையும் விவாதிப்பதையும் விட அவற்றை நடைமுறையில் பின்பற்றுவதே முக்கியம், என்பதே எனது திடமான கருத்து. போராளியாக மாறியபின்பே எனது அரசியல் சித்தாந்தம் மேலும் வளர்ச்சியடைந்தது. எனக்கென்று சில கொள்கைகள் இருக்கின்றன. அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகள் தான் அவை. அக்கொள்கைகளையே நான் முழுமையாக ஏற்று செயல்படுகிறன் . நான் நடைமுறைச் சாத்தியங்களை பின்பற்றும் ஒருவன். எனது இலட்சியத்தில் நான் முழுநம்பிக்கை உடையவன். அரசியல் தத்துவங்களையிட்டு வீணே தர்க்கவாதம் புரிவதைவிட செயற்பாட்டையே நான் விரும்புகிறேன். அதுவே முக்கியமானது. நான் அரசியல் தத்துவங்களையிட்டு பேசுவதில்லை: அவற்றை நான் ஆழமாகப் படித்ததுமில்லை. செய் அல்லது செத்துமடி என்பதிலேயே எனக்கு நம்பிக்கை உண்டு."

நான் கிட்டுவிடம் அவரது செயல்ரீதியான அணுகுமுறை ஒன்றை உதாரணத்துக்கு கூறுமாறு கேட்டேன். அவர் சாதிப் பிரச்சனையை எடுத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் நாளாந்த வாழ்வில் சாதிப்பிரச்சினையே கிடையாது என்று கூறினார். ஆயினும் 'பிரபுத்துவ' அம்சம் நிலவும் யாழ்ப்பாணத்து சமூகத்தில் கிட்டுவின் அணுகுமுறை வித்தியாசமானது.

"எவ்விடத்திலும் தகுதியுள்ள பின்தள்ளப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தால் அவர்களையே வட்டாரப் பிரதிநிதியாகவோ அல்லது ஒரு முகாமின் பொறுப்பாளராகவோ நியமித்து விடுவேன். இதனால் என்னோடு தொடர்பு கொள்ளும் பெரும்பான்மையான சமூதாயம் தப்பெண்ணங்களை மறந்துவிடுகிறது. பல்வேறு சமூதாயங்களிடையேயும் நெருங்கிய புரிந்துணர்வும் உறவுகளும் ஏற்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றன."

**கே: சில பிரிவினர் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்களே! (கிட்டுவிடம் கேட்டேன்.)**

**கிட்டு:** ஆம். சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். சிலர் அதற்கு மேலாகவும் சென்று, எமது இயக்கத்தில் குறிப்பிட்ட சாதியினரே ஆதிக்கம் செலுத்துவதாகக் கூடக் கூறுகிறார்கள். அது பிழையான அபிப்பிராயம். சிலர் வேண்டுமென்றே தமிழ்ச் சமுதாயம் முழுவதும் எம்மோடு இணையாமல் தடுக்க இவ்வாறு பொய்ப் பிரச்சாரம் செய்கின்றார்கள். ஆனால் என்ன நடந்தது என்பதை நீங்கள் உணர வேண்டும். திரு. பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தபோது, துவக்கத்தில் அவரோடு இணைந்தவர்கள் யார்? அவரது நண்பர்கள், அவருடன் படித்த பாடசாலை சக மாணவர்கள், அவருடைய உறவினர்கள், அயலவர்கள் -இப்படி அவரது ஊரவர்களே முதலில் சேர்ந்தனர். ஆகவே இயல்பாக வல்வெட்டித்துறையிலேயே இயக்கம் ஆரம்பமாகியது. நாங்கள் படிப்படியாகவே வளர்ந்தோம். காலம் செல்லச் செல்ல தமிழீழத்தைச் சேர்ந்த பலரும் எம்மோடு இணைந்தனர். எமது இயக்கத்தில் மூத்தோருக்கே முதலிடம் (SENIORITY) என்ற அடிப்படையில் தளபதிகளை, நியமனம் செய்கிறோம். ஆரம்பத்தில் இணைந்த முதல் முகாமைச் சேர்ந்தவர்களையே தலைவர்களாக நாம் நியமிப்பது எனும் கொள்கையை பின்பற்றி வருவதால் , முதல் அணியைச் சேர்ந்த வல்வெட்டித்துறை வாலிபர்கள், தலைவர்களாக இருக்கின்றனர். அதே சமயம், ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஏராளமானோர் தலைவர்களாகவும் தளபதிகளாகவும் செயற்படுகின்றனர். விரைவில் சீனியோரிட்டி , தகுதி போன்றவற்றின் அடிப்படையில் இயக்கப் பொறுப்புகளை எம்மிடமிருந்து கையேற்பார்கள். அதன் பின்னர் இந்த V. V. T. மாயை மறைந்துவிடும். ஆனால் சாதி அடிப்படையில் எமது இயக்கம் இயங்குவதாகக் கூறப்படுவது கலப்பற்ற சுத்தப் பொய்.

**கே: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் தலைமைப் பதவிக்கு போட்டி பூசல்கள் இல்லையா?**

**கிட்டு:** கிடையாது. ஏன் கிடையாது என்பதை உங்களுக்கு நான் சொல்ல வேண்டும். போர்க்களங்களில் விடுதலைப் புலிகளை நீங்கள் பார்த்தீர்களானால் அதில் உயர்மட்டத் தலைவர்களும் இருப்பார்கள். அடிமட்டப் போராளிகளும் இருப்பார்கள். இது எவ்வாறு நிகழ்கின்றதென்றால் போர்க்களத்தில் நாம் தலைமை தாங்கி முன்னின்று போராடுகின்றோமே தவிர, எமது வீரர்களை முன்னே அனுப்பிவிட்டு நாம் கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருப்பவர்கள் அல்லர். எனவே எங்கள் வீரர்களுக்குள் போட்டிகள் ஏதாவது இருந்தால்கூட அது உப்பரிகை வாழ்க்கை வாழ்வதற்கல்ல, தமிழீழ சுதந்திரத்தை விரைவில் அடைவதில்தான்! தமிழீழ மண்ணின் விடுதலைக்காக உயிரைத் தியாகம் செய்வதிலேயே தான் போட்டி! ஆகவே வாழ்வதா? சாவதா? என்கிற ஜீவ மரணப் போராட்டம் எம்முடையது.

இச்சமயத்தில் யாழ்ப்பாண குடிமக்கள் கிட்டுவைப் பற்றிக் கூறிய சில விடயங்களைப் பற்றிக் கேட்டேன். கிட்டு எப்பொழுதுமே அபாயத்தின் மத்தியிலேயே வாழ்கின்றார். ஒருதடவை றக் ஒன்றின் மீது படுத்தபடி கெலிகொப்டரைச் கிட்டு சுட்டு வீழ்த்தினாராம். யாழ்க் கோட்டைக்குள்ளிருந்து எப்பொழுது இராணுவத்தினரால் 'செல்' அடிக்கப்பட்டாலும் அந்த இடத்தில் முன்னணியில் நின்று எதிர்த் தாக்குதல் நடத்துபவர் கிட்டுவேதான். தேவையின்றி தன்னை வெளிக்காட்டிக் கொள்வதை தவிர்க்கும்படி கிட்டுவிடம் கூறினேன்.

அவர் உறுதியான குரலில் கூறினார்.

"எப்படியோ இதுவரை அதிட்டவசமாக நான் உயிரோடு இருக்கிறேன். நான் இப்போது கூறப்போவது உங்களுக்கு ஆச்சரியம் அளிக்கும். நான் இஸ்ரேலிய இராணுவத் தளபதி முன்பு ஒருமுறை கூறியதையே போர்க்களத்தில் கடைப்பிடிக்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்பே நான் குறிப்பிட்ட இஸ்ரேலியத் தளபதி, போர்க்களத்தின் பின்னே நின்று கட்டளையிட்டதில்லை. அவர் எப்பொழுதும் களத்தில் முன்னணி வகித்து, முன்னேறுங்கள், முன்னேறுங்கள்; என்னைப் பின் தொடருங்கள்; என்று முழங்கியதாகப் படித்தேன். தான் பின்னால் நின்றுகொண்டு, தனது படைகளை முன்னேறுங்கள் என்று கூறியதே கிடையாது."

**கே: உங்களால், உங்கள் படைகளை எவ்வாறு கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள முடிகிறது?**

**கிட்டு:** "நல்ல கேள்வி இது: நாங்கள் எவரையும் இயக்கத்தினுள் உடனடியாக எடுப்பதில்லை. நாம், எவரையும் கண்காணித்து முதலில் சிறு சிறு வேலைகளைக் கொடுப்போம். அவர் தனது நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தனது நடவடிக்கை மூலம் காட்டும் பட்சத்தில், அவருக்கு மேலும் பொறுப்புக்களைக் கொடுப்போம். இறுதியாகவே ஆயுத பயிற்சியளிப்போம்.

என்கீழ் செயற்படும் விடுதலைப்புலிகள், கட்டுப்பாடின்றிச் செயற்பட்டால், அத்தவறுக்கு நானே பொறுப்பாளி. நான் கட்டுப்பாடின்றி நடந்தால், என் தலைவர் பிரபாகரன் அவர்களே அதற்குப் பொறுப்பாளி. எமது இயக்கத்தைச் சேர்ந்த எவராவது எம்மோடு இணைந்து வேலை செய்ய முடியாது என்று கருதுவார்களேயானால், அவர் எமது இயக்கத்தைவிட்டு வெளியேறும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அப்படி வெளியேறுபவர், வேறு இயக்கங்களில் சேரவோ அல்லது புதிய குழுவொன்றைத் தொடங்கவோ அவருக்கு அனுமதி கிடையாது.

தமிழீழப் பிரதேசங்களில் செயற்படும் எமது இயக்கத்தின் மாவட்டத் தளபதிகளுக்கும், தலைவர் பிரபாகரனுக்குமிடையே நெருக்கமான தொடர்பு எப்போதுமே இருந்து வருகிறது. தேவையானபோது, எமது தலைவரை நேரே

கண்டு ஆலோசனை நடாத்துவோம். எமது கருத்துக்களை தலைவர் பிரபாகரன் ஆழமாக பரிசீலிப்பார்." ■


**தலைவர் பிரபா...**

வதற்கு இந்தியா இந்து மாகடலில் செய்த அத்துமீறிய படுகொலையால் முட்டுக்கட்டை ஏற்படுகிறது. தமிழீழத்தில் அமைதி திரும்புவதை இந்தியா விரும்பவில்லை என்பதை, அமைதிப்பணி தொடர்பாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த கப்பல் இடைமறிக்கப்பட்டதும், அதில் இருந்தோர் கொல்லப்பட்டதும் உலகிற்குத் தெளிவாக்கியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காந்தியின் கைத்தடி தவறிப்போனதால் ....



'தேசியத் தலைவரின் துணைவன்'

மண்ணையும் மக்களையும் நேசித்த
மாமனிதர் நீங்கள்!
மூச்சுக்கு மூச்சு
'தமிழீழம்.... தமிழீழம்' என்றே
உச்சரித்துக் கொண்டிருந்தவர் நீங்கள்.

காந்தியின் கைத்தடி மீண்டும் ஒரு முறை
தவறிப் போனதால்
கடலோடு கடலாய்


காற்றோடு காற்றாய்
பிரபஞ்ச அதிர்வில்
கலந்து போனீர்கள்!

நம்ப மறுத்து
நெஞ்சு கனக்கிறது
உங்களின் ஈகத்தில்
எழுவோம்! நாங்கள் எழுவோம்!
உங்களின் கனவு மெய்ப்பட எழுவோம்!

''சைனைட்' குப்பியை எமது தோழர்கள் அணிந்து செல்வது எமது தமிழீழ இலட்சியத்தில் நாம் கொண்டுள்ள உறுதியான நிலைப்பாடு, எமது துணிவு ஆகியவற்றை எடுத்துக்காட்டும் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. உதாரணமாக எமது யாழ்ப்பாண மாவட்டத் தளபதி கிட்டு கூறியுள்ளதைப்போல 'எமது கழுத்திலே 'சைனைட்' குப்பிகள் இருக்கின்றவரை பூமியிலுள்ள எந்தச் சக்திக்கும் நாம் அஞ்சவேண்டிய அவசியமில்லை.'
இந்த உணர்வு எமது போராளிகளுக்கு தமிழீழ இலட்சியத்தில் மேலதிக நம்பிக்கையையும், விசேட துணிவையும் கொடுக்கின்றது. இது எமக்கு தியாகம் செய்யும் வைராக்கியத்தையும், எமது உயிரை, எமது வாழ்வு முழுவதையுமே குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் நெஞ்சு உறுதியையும் கொடுக்கின்றது.'

- தலைவர் பிரபாகரன் - 1987இல்





சுதந்திரப் பறவைகள் பெண் விடுதலைக்கு கிட்டண்ணாவின் அத்திவாரம்



தேசத் தளபதி குடும்பத் தலைவியுடன்

தமது வாழ்வை மட்டும் நினையாமல், தமிழீழத்தை நினைத்தவர்கள், தங்களின் உயிரை நினைக்காமல் விடுதலையை நினைத்தவர்கள், சாவு வரலாம் என்று தெரிந்தும் பயணம் செய்தவர்கள், செய்பவர்கள்; பயணம் சென்றவர்கள் பலர் வரவில்லை.

ஒவ்வொரு முறையும் அவர்கள் தம் பயணத்தைத் தொடரும்போதும், நாம் எப்போதும் கரையிலிருந்து கைவீசி வாழ்த்தி அனுப்புவோம். அது மட்டும்தான் எங்களால் முடியும் பரந்த கடலிலே அவர்கள் கரைந்தபோது எம்மால் அதை உணர முடிந்ததே தவிர உதவ முடியவில்லை. அவர்கள் எரிவதைக் கண்டோம்; எம் கண்களாலேயே பார்த்தோம், பார்த்துக்கொண்டே இருந்தோம், நாம் பார்த்துக் கொண்டிருக்க அவர்கள் எரிந்து கொண்டே இருந்தார்கள்.



'புலி கிடந்த குகை' எனத் தன் வயிற்றைச் சுட்டிக்காட்டி மகனின் வீரத்தை விளக்கினாள் சங்கத்து வீரத்தாய் -உதாரணமாய் கிட்டம்மா.



## தமிழ்த் தாயின் புலம்பல்

என் மகனே! எங்கு சென்றாய்.
வீரத்தின் விளை நிலமே
வீரகாவியங்கள் படைத்த உன்
தினவெடுத்த தோள்கள் சரிந்தனவோ!
அலைபோன்ற மக்களின்
அன்பினில் திளைத்தவனே!
அலைகடல் நடுவே
எரிமலையாய் வெடித்தாய்
அன்னை என் மானத்தை காத்தாய்
என் மகனே!
நீ நிச்சயம் மீண்டும்..... மீண்டும்
எழுந்து வருவாயடா - என்
அடிமை விலங்கொடிப்பாயடா!



கொழும்புக்கு நல்லெண்ண விஜயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்